1981 பிப்ரவரி 9]

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்த வைத்திய மருந்துகள் விலைக் குறைப்பு பற்றிச் சொன்னார்கள். அதிக விலை கொடுத்து வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. சித்த வைத்திய சங்கத்தின் சார்பாக அரசுக்கு வரியை ரத்து செய்ய வேண்டுமென்று மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அரசு அதை மீண்டும் பரிசீலனை செய்யுமா? பரிசீலனை செய்து பரிந்துரை செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, சித்த வைத்தியத்தை வளர்ப்பதற்கு இந்த அரசு எல்லா விதமான நடவடிக்கையும் எடுக்கும். வரி போடப்படுவதினாலேயே வளர்ச்சி பாதிக்கப்படுமானால், அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அல்லோபதி முறையைவிட சித்தா முறை நல்லமுறையில் இருப்பதாக அந்த முறையில் சிகிச்சை பெறுபவர்கள் சொல்கிறார்கள். அந்த முறைக்கு ஊக்கம் அளிப்பதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு—அந்த முறையில் அதற்கு வேண்டிய மூலப்பொருள்களான சில மூலிகைகளை வைத்துக் கொண்டு அவர்கள் மருந்துகள் தயாரிக்கின்றார்கள். அவர்களுக்கு இந்த அரசு ஊக்கம் கொடுத்து சித்தா துறை முன்னேறுவதற்கு வசதியாக இந்த விற்பனை வரியை நீக்குவதனால் அரசாங்கத்திற்கு எவ்வளவு வருமான இழப்பு ஏற்படுகிறது என்பதையும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்து விட்டேன். பத்தரை இலட்சம் ரூபாய் வருமானம் வருகிறது என்று தெரிவித்து விட்டேன். வரி போடுவதினாலேயே சங்கடம் ஏற்படுமானால் நிச்சயமாக இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கொடிய வியாதிகளைத் தீர்க்கக்கூடிய மருந்துகள் சித்த மருத்துவத்தில் உள்ளன. ஆனால் ஆஸ்பத்திரியில் போதுமான அளவிற்கு மருந்துகள் இல்லை. ஆஸ்பத்திரியில் சித்த மருத்துவ முறையில் சிகிச்சை செய்து கொள்வதற்கு மக்கள் 100 பேர், 150 பேர்கள் என்று கியூவில் நிற்கின்றார்கள். மருந்துகள் கிடைக்காததினால் தடை ஏற்படுகிறது. அந்தத் துறைக்கு மானியம் கொடுக்க அரசு முன்வருமா? விற்பனை வரியை ரத்து செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவம் வளர்வதற்கு எல்லாவித நடவடிக்கையும் எடுக்கப்படும். வரி போடுவதினாலே கஷ்டம் என்றால் அரசு பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1981 பிப்ரவரி 9

பூச்சி மருந்து, உரங்கள் மீதான விற்பனை வரி.

*வினா எண் 243—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

பூச்சி மருந்து, உரங்கள் முதலியவைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இல்லை.

[முற்பகல் 9-10]

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவைகளுக்கு விதிக்கப் பட்டிருக்கிற வரியினால் எவ்வளவு வருமானம் வருகிறது? தமிழக அரசினால் இந்த வரியை விலக்க முடியவில்லை என்றால் மத்திய அரசிடம் மானியம் வாங்கி இதற்கு வரி விலக்கு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு விதிக்கப்பட்ட வரியினால் வருமானம் 40 இலட்சம் ரூபாய்; மற்ற இரசாயன உரங்கள் வரியிலிருந்து அரசுக்குக் கிடைப்பது 5 கோடி ரூபாய். விவசாயி களுக்கு அரசு பலவித நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறது. ஆகையால் இந்த வரியைக் குறைக்கும் எண்ணமோ, ரத்து செய்யும் எண்ணமோ அரசுக்கு இல்லை.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, இந்தப் பூச்சிக்கொல்லி மருந்து, உரங்கள் மீது மத்திய அரசு விதித் திருக்கிற வரி எத்தனை சதவீதம்? மாநில அரசு விதித்திருக்கிற வரி எத்தனை சதவீதம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ஆயத்தீர்வை $3\frac{1}{2}$ சதவீதமாக விதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு வரி விதிக்கப்பட்டதினால் அதிலிருந்து அரசுக்கு ஆண்டுக்கு 40 இலட்சம் ரூபாய்தான் வருமானம் என்று சொன்னார்கள். இந்த 40 இலட்சம் என்பது அவ்வளவு பெரிய தொகையாக இல்லாத காரணத்தால் மத்திய சர்க்காரை எதிர் பாராமல் விவசாயிகளுக்கு 40 கோடி ரூபாய் 50 கோடி ரூபாய் என்று சலுகை அளித்துக் கொண்டிருக்கும் இந்த அரசு இந்த $3\frac{1}{2}$ சதவீதம் வரியை 2 சதவீதமாகக் குறைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1981 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நீண்டகாலமாக 1965 லிருந்தே இந்த வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதிலே எந்தவிதமான மாற்றமும் இதுவரையில் இல்லை. எத்தனையோ பொருட்களுக்கெல்லாம் வரி விதிக்கப்பட்டு அல்லது வரி உயர்த்தப்பட்டிருந்தாலும் இந்த அரசு இவைகளுக்கு உயர்த்தாமல் அப்படியே வைத்திருக்கிறது. அதுமட்டுமல்ல, விவசாயிகள் உற்பத்தி செய்கிற உணவுப் பொருட்கள் மீது இந்த அரசு வரியே விதிக்கவில்லை. ஆகையால் இப்போது போடப் பட்டிருக்கிற வரியை நீக்குவதற்கோ, குறைப்பதற்கோ அரசுக்கு எண்ணம் இல்லை.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, அரசு தொடர்ச்சியாக தன்னுடைய கொள்கையிலே சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள் ஆகியோருக்கு உதவி செய்வது என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதைப்போல இந்தப் பூச்சிக்கொல்லி மருந்திலும் இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு பல்வேறு கஷ்டங்கள் இருக்கின்ற காரணத்தால், சலுகை அளித்து அல்லது வரி விதிக்காமல் இந்த அரசு பார்த்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இந்தப் பூச்சிக்கொல்லி மருந்து விற்பனையைப் பொறுத்தவரையில் அது பெரிய விவசாயிகளுக்கு விற்கப்படுகிறதா அல்லது சிறிய விவசாயிகளுக்கு விற்கப்படுகிறதா என்று கண்டறிவது கஷ்டம். பெரிய விவசாயிகள் சிறு விவசாயிகளிடம் பணத்தைக் கொடுத்து வாங்கிச் செல்வார்கள் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆகவே அத்தகைய தவறுகள் நடக்காமல் இருக்க பெரிய விவசாயி, சிறிய விவசாயி என்று பார்க்காமல் எல்லோருக்கும் ஒரேமாதிரியாக விற்பனைச் செய்யப்படுகிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த உரத்தினுடைய விலை ஏறிக்கொண்டே போகிறது. இந்த மாதம் 1-ம் தேதியிலிருந்து டன் ஒன்றுக்கு 150 ரூபாய் ஏறியிருப்பதாக பத்திரிகையில் பார்த்தேன். இப்படி விலை ஏறுகிற காரணத்தால் ஏற்கெனவே விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே இந்தப் பூச்சிக்கொல்லி மருந்தின் விலையைக் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்த இந்த அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது விற்பனை வரியைப் பற்றியது, அடுத்து வினா எண் 244.